சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 65/2020**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
வாக்குமூலம் – வா.சா–1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : எஸ்.பி.சாமிநாதன் | மதம் | : | |
| த/க/பெ. | : | தொழில் | : | |
| கிராமம் | : | வயது | : | |
| தாலுகா | : பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் சாட்சியம்.

---

## முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 10.12.1969 தேதியிட்ட முதலாம் வாதி மற்றும் சிலருக்கிடையே பாக சாசன ஆவணத்தின் சான்று நகல்.
2. 22.02.1971 தேதியிட்ட இரண்டாம் வாதிக்கு முதலாம் வாதி ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்று நகல்.
3. தாவா சொத்துக்கள் குறித்த வருவாய் துறை சிட்டா 2 எண்ணிக்கைகள் (க.ச.131/1ஏ, க.ச.135/1ஏ1ஏ, 135/1ஏ1பி)
4. தாவா சொத்துக்களில் க.ச.131, 131/1ஏ ஆகியவை குறித்த வருவாய் துறை புலப்படங்கள் (2 எண்ணிக்கை)
5. தாவா சொத்துக்களில் க.ச.135, க.ச.135/1ஏ1ஏ, 135/1ஏ1பி ஆகியனகுறித்த வருவாய் துறை புலப்படங்கள் (3 எண்ணிக்கை)
6. 23.10.2018 மூன்றாம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவண சான்று நகல்.

7. 07.04.2022 4 மற்றும் 5 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவண சான்று நகல் (மேற்படி ஆவணமானது இடைநிலை மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.01.27 18:21:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.